

நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலையில் 65 அடி உயர கொடிக்கம்பத்தில் கழக கொடியை கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி.ஏற்றினார். உடன் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநகர செயலாளர் சுப்பிரமணியன், தலைமை செயற்குழு உறுப்பினர் லட்சுமணன்,பொதுக் குழு உறுப்பினர் பரமசிவம் ஐயப்பன்,தச்சை சுப்பிரமணியன்,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்,உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஆவுடையார்குளம் உபரி கால்வாய் சீரமைப்பது குறித்து நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள். இதனைத் தொடர்ந்து, திருச்செந்தூர் அருகே உள்ள ஆலந்தலை பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை பயன்படுத்தி கால்நடை தீவன பயிர் உற்பத்தி திட்டத்தை துவக்கி வைத்தார். உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் திருமிகு அ.பிரம்மசக்தி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் திருச்செந்தூர் ஒன்றிய துணை பெருந்தலைவர் செங்குழி ரமேஷ், நகரச் செயலாளர் வாழ் சுடலை, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திருப்புவனத்தில்

# 16 .52 கோடி செலவில் புதிய குடிநீர் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அடிக்கல் நாட்டினார்!

சிவகங்கை. ஜுலை 16-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சிக் குட் பட்ட பகுதியில் கூடுதல் குடிநீர் தேவைக்காக அம்ருத்2.0 திட்டத்தின் கீழ் ரூபாய் 16 கோடியே 52 லட்சம் செலவில் புதிய கூடுதல்குடிநீர் திட்டப்பணிக்கான அடிக்கல் நாட்டு விழா மாவட்ட வருவாய் அலுவலர் ப.மணிவண்ணன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

ரூபாய் 16 கோடியே 52 லட்சம் செலவில் புதிய கூடுதல் குடிநீர் திட்டப்பணிக்காக அடிக்கல் நாட்டியும் ,211 பயனாளிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 51 லட்சத்து 722 மதிப்பிலான கடன் உதவிகளையும் வழங்கி கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சி பணிகளை செய்து வருகிறார். தலைநகர் முதல் கடைக்கோடி கிராமம் வரை அரசின் திட்டங்கள் வளர்ச்சி பணிகள் மக்களுக்கு சென்று சேர வேண்டும் என்று விரும்புகிறார். அதற்கான திட்டங்களை அறிவித்து அதற்கான நிதியும் ஒதுக்கி வருகிறார்.

திருப்புவனம் பேரூராட்சி பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பொழுது ரூபாய் 16 கோடி 51 லட்சத்தில் புதிதாக குடிநீர் திட்டப் பணிகள் அம்ருத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப் பட உள்ளது.இது இப்பகுதி மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றப்படுகிறது. ரூபாய் 30 லட்சத்தில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

இதுபோல் சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் அரசின் சார்பில் திட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தமிழகம் முழுவதும் தலைவர் கலைஞர் வழியில் அனைத்து கிராமங்களும் நகரங்களும் அடிப்படையும் கூடிய வசதி பெற வேண்டும் என்று முதல்வர் விரும்பி பல்வேறு திட்டங்களை அறிவித்து அதனை செயல்படுத்தி வருகிறார்.

முதல்வர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு வருவதால் தமிழ்நாடு இந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலம் என்ற இடத்தை பெற்றிடும். தொடர்ந்து தமிழக முதல்வர் அவர்கள் எடுத்திடும் அனைத்து முயற்சிகளுக்கும் மக்கள் தங்களது ஆதரவினை தொடர் ந்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், ஒன்றிய குழு தலைவர் பா. சின்னையா, முன்னாள் எம்.எல்.ஏ. மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்ப சாமி, பேரூராட்சி துணை தலைவர் ரகமத்துல்லா கான்,மானாமதுரை நகர செயலாளர் க.பொன்னுச் சாமி மத்திய கூட்டுறவு வங்கி நிர்வாக இயக்குனர் ராஜேந்திரன் மண்டல கூட்டுறவு இணை பதிவாளர் திருமதி ஜுனு கோட்டாச்சியர் சுகிதா நிர்வாகிகள் புதூர் கண்ணன், முத்துக்குமார், சேகர், அண்ணாமலை, பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயராஜ் உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பண்ணை மூன்றடைப்பு கிராமத்தில் மணிகண்டன் என்பவர் இடி மின்னல் தாக்கி இறந்ததையொட்டி, அவருடைய குடும்பத்தினருக்கு ரூ.4,00,000/-(ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) நிவாரண நிதியை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.


